பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 03 2026 TUESDAY 12 40 PM

ஆகாஷவாணி
(Tune)

தலைப்புச் செய்திகள்

- தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று மாலை 6 மணி வரை கருத்துக்கணிப்புகளை வெளியிடக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
- காசநோயை முற்றிலும் ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.
- மத்திய அரசின் திட்டங்கள் மூலம் விவசாயிகளின் வருவாய் அதிகரித்துள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
- Hormuz நீரிணை வழியாக 92 ஆயிரம் டன் எரிவாயு ஏற்றிய இரண்டு கப்பல்கள் பாதுகாப்பாக இந்திய துறைமுகங்களை வந்தடைய உள்ள.
- வியட்நாம் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆனந்தாஸ் ராஜ்குமார் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று மாலை 6 மணி வரை கருத்துக்கணிப்புகளை வெளியிடக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில், வாக்குப்பதிவு நடைபெறும் ஏப்ரல் 23-ம் தேதியன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக்கணிப்புகளை வெளியிடக்கூடாது என்று தெரிவித்துள்ளது.

புதுச்சேரி, கேரளம், அசாம் சட்டப்பேரவை தேர்தல் மற்றும் இடைத்தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி ஏப்ரல் 9-ம் தேதி காலை 7 மணி முதல் 29-ம் தேதி மாலை 6.30 மணி வரை வாக்குப்பதிவுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை நடத்துவதற்கும் வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்படுவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு எட்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஒப்பந்தத்தில் தி.மு.க. தலைவர் திரு.மு.க. ஸ்டாலினும், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவனும் கையெழுத்திட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

அசாம், கேரளம், புதுச்சேரியில் அடுத்த மாதம் 9-ம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

புதுச்சேரியில் 30 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு 445 பேர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

பிஜேபி மாநில தலைவர் வி.பி. ராமலிங்கம், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி. வைத்தியலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் திரு. Salim, அ.இ.அ.தி.முக. மாநில செயலாளர் திரு. அன்பழகன் உள்ளிட்டோர் நேற்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் என்.ஆர். காங்கிரஸ் 16 தொகுதிகளிலும், பிஜேபி 10 தொகுதிகளிலும், அ.இ.அ.தி.மு.க. மற்றும் லட்சிய ஜனநாயக கட்சி தலா இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 16 தொகுதிகளிலும், தி.மு.க. 12 தொகுதிகளிலும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

இந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ள விடுதைல சிறுத்தைகள் கட்சி மூன்று தொகுதிகளில் மட்டும் தனித்து போட்டியிடுவதாகவும் மீதமுள்ள 27 தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும் அறிவித்துள்ளது.

தமிழக வெற்றி கழகம் 28 தொகுதிகளிலும் அதன் கூட்டணி கட்சியான நேயம் மக்கள் கழகம் இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

<<<<<<>>>>>>

*உலக காசநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.*

*1882-ம் ஆண்டு இதேநாளில் டாக்டர் Robert Koch காசநோய் பாக்டீரியாவை கண்டுபிடித்த நாளை குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 24-ம் தேதி உலக காசநோய் தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.*

*'காசநோயை ஒழிக்க முடியும்' என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.*

*இந்த நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், காசநோய் இல்லா இந்தியா இயக்கம் மூலம் காசநோயை கண்டறிந்து, இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.*

*காசநோயை முற்றிலுமாக ஒழிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.*

*காசநோயை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.*

*இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காசநோய் ஒழிப்பதற்கான இயக்கம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.*

*காசநோயை கண்டறிந்து குணப்படுத்துவதை இந்த இயக்கம் மேற்கொண்டு வருவதாகவும், இந்நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.*

*இதனிடையே காசநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் மூலம் முழுமையாக குணப்படுத்த முடியும் என்று சென்னையை சேர்தந் நுரையீரல் தொற்று சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோஷன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Voice byes- 60 Sec)*

*<<<<<<>>>>>>*

*மத்திய அரசின் திட்டங்கள் மூலம் விவசாயிகளின் வருவாய் அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், விவசாயிகளின் வருவாய் எட்டு மடங்கு அதிகரித்து உள்ளதாக கூறியுள்ளார்.*

*வேளாண் துறைக்கான நிதி ஒதுக்கீடு 19 ஆயிரத்து 306 கோடி ரூபாயில் இருந்து தற்போது ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதா தெரிவித்துள்ளார்.*

*நாட்டில் உணவு தானிய உற்பத்தி 44 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*Hormuz நீரிணை வழியாக 92 ஆயிரம் டன் எரிவாயு ஏற்றிய இரண்டு கப்பல்கள் பாதுகாப்பாக இந்திய துறைமுகங்களை வந்தடைய உள்ளன.*

*ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் குவைத்தில் இருந்து எரிவாயு ஏற்றி வரும் Pine Gas, Jag vasant கப்பல்கள் வரும் 28-ம் தேதிக்குள் இந்திய துறைமுகங்களை வந்தடைய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதனிடையே குவைத் மீது நடத்தப்பட்ட ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

*அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின் பகிர்மான நிலையங்கள் சேதம் அடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.*

*இஸ்ரேல் தாக்குதலில் லெபனானில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து 39 ஆக அதிகரித்துள்ளது.*

*இந்த தாக்குதலில் 2 ஆயிரத்து 876 பேர் காயமடைந்துள்ளதாகவும் லெபனான் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.*

*<<<<<<>>>>>>*

*Doha-வில் இருந்து கடந்த 20-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை கத்தார் ஏர்வேஸ் நிறுவனம் 7 ஆயிரத்து 750 இந்தியர்களை தாயகம் அழைத்து வந்துள்ளதாக இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.*

*கத்தாருக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கத்தார் ஏர்வேஸ் இணையதளம், செயலி, முகவர்கள் மூலம் விமான பயண டிக்கெட் முன்பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*கத்தார் நிர்வாகம் வெளியிடும் அறிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*கத்தாரில் உள்ள கல்வி நிறுவனங்கள் செயல்பட தொடங்கியுள்ள நிலையில் மாணவர்கள் அவசகால நெறிமுறைகளின்படி பள்ளிகளுக்கு செல்ல வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.*

*JEE, NEET போன்ற தேர்வுகளை எழுதவுள்ள மாணவர்களின் பெற்றோர்களுடன் கத்தாருக்கான இந்திய தூதர் ஆலோசனை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் Arthur துறைமுகத்தில் உள்ள Valero எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் நேரிட்ட விபத்து காரணமாக அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.*

*தீயைணப்பு வீரர்களும், அவசர கால பேரிடர் மீட்பு படையினரும் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*சுத்திகரிப்பு சாலை அருகேயுள்ள நெடுஞ்சாலைகளில் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வாகன ஓட்டிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்*

*அமெரிக்காவின் மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலையான Valero-வில் நாள்தோறும் 4 லட்சத்து 35 ஆயிரம் பீப்பாய் எரிபொருள் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது.*

*<<<<<<>>>>>>*

*வியட்நாம் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆனந்தாஸ் ராஜ்குமார் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதி சுற்று ஆட்டததில் அவர் 21-15, 21-16 என்ற செட் கணக்கில் தாய்லந்தின் Korakrit Laotrakul-ஐ வென்றார்.*

*<<<<<<END>>>>>>*